2019ம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

நிறுவனத்தின் பெயர் - மாவட்ட செயலகம், வவுனியா

செலவினத் தலைப்பு இல - 266

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

அத்தியாயம் 03 - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

அத்தியாயம் 04 - செயலாற்றுகை சுட்டிகள்

அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

அத்தியாயம் 06 - மனித வள விபரம்

அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

மாவட்டத்தைப் பற்றிய அறிமுகம்

எல்லைகள்

இம்மாவட்டம் கிழக்கே அநுராதபுர மாவட்டத்தின் ஒரு பகுதியையும், முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு பகுதியையும், வடக்கே முல்லைத்தீவு மாவட்டத்தையும், மேற்கே மன்னார் மாவட்டத்தின் பெரும்பகுதியையும் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு பகுதியையும், தெற்கே அநுராதபுர மாவட்டத்தையும் எல்லையாக கொண்டுள்ளது. பிரசித்தி பெற்ற A- 09 பாதையும் கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறை செல்லும் புகையிரதப் பாதையும் கோட்டையிலிருந்து தலைமன்னார் செல்லும் புகையிரதப் பாதையும் இம் மாவட்டத்தை ஊடறுத்துச் செல்கின்றன. கனகராயன் ஆறு, பாலி ஆறு, பறங்கி ஆறு போன்ற பிரதான ஆறுகளும் கிளை அருவிகளும் இம் மாவட்டத்தினூடாகப் பாய்கின்றன.

வரலாற்று முக்கியத்துவம்

வன்னிப் பிரதேசத்தில் உள்ள கிராமங்கள் அனைத்தும் குளங்களின் பெயர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளமை இந்தப் பிரதேசத்தின் சிறப்பம்சமாகும். இந்தப் பிரதேசத்தில் நாகர்காலத்தில் பல ஆறுகள் மறிக்கப்பட்டு குளங்கள் கட்டப்பட்டுள்ளன. மழைகாலத்தில் மலைப்பிரதேசங்களில் இருந்து வடிந்து பாயும் நீரை சமநிலங்களில் தேக்கி வைத்து விவசாயம் செய்வதற்காக குளங்கள் கட்டப்பட்டுள்ளன. மழைகாலத்தில் மலைப்பிரதேசங்களில் இருந்து வடிந்து பாயும் நீரை சமநிலங்களில் தேக்கி வைத்து விவசாயம் செய்வதற்காக குளங்கள் கட்டப்பட்டுள்ளன. புராதன காலத்தில் இந்தப்பிரதேசம் வயல் வெளிகளாகவும், பண்ணைகளாகவும் பிரிக்கப்பட்டிருந்ததாக வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது.

தற்போது வவுனியா மாவட்டத்தில் மட்டும் சுமார் 719 மத்திய சிறிய குளங்கள் உள்ளன. இந்த மாவட்டத்தின் பெரிய நீர்ப்பாசனத் திட்டமாக பாவற்குளம் இருக்கின்றது. இந்தக்குளம் ஈரற்பெரியகுளம் ஊடாகப் பாயும்

கல்லாற்றை மறித்துக் கட்டப்பட்டுள்ளது. இந்தக் குளத்திலிருந்து நீர் படிந்து பாயும் இடங்களில் பல சிறிய குளங்கள் இருக்கின்றன. அதுபோன்று மதகுவைத்தகுளம், சின்னத்தம்பனை போன்ற இடங்களிலும் ஐந்து தலை நாகச் சிலைகள் இருப்பது நாகர்களுடைய காலத்திற்கான அடையாளங்களாக இருக்கின்றன.கிழக்கு மூலை பிரதேசத்தில் மடுக்கந்தை, சமளங்குளம் போன்ற இடங்களில் உள்ள மலைத்தொடர்களில் மழை காலத்தில் வழிந்து பாயும் நீர் தடுத்து வைக்கப்பட்டு பல இடங்களில் குளங்கள் கட்டப்பட்டுள்ளன. மடுக்கந்தை பகுதுகளிலிருந்த வடக்கு நோக்கி வடிந்து பாயும் நீரை தேக்கி வைப்பதற்காக

குளம் கட்டப்பட்டுள்ளது. இந்தக்குளத்தின் பெயர் "விளாங்குளம்" என அழைக்கப்பட்டுள்ளது

கி.பி 1750களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக பல குளங்கள் உடைந்துள்ளன. அதில் விளாங்குளமும் ஒன்றாகும். இந்த குளத்தை திருத்தி தரும்படி பிரதேச வாசிகள் பனங்காம இராஜதானியில் வவுனியனாக பதவி வகித்தவரிடம் முறையிட்டனர். அவர் இந்த குளத்தை திருத்திய காரணத்தினால் இதற்கு " வவுனியன் விளாங்குளம்" என்ற பெயர் வைக்கப்பட்டது.

கி.பி 1980களில் வவுனியன் விளாங்குளத்தில் கடமை புரிந்த J.P.லூயிஸ் என்ற அதிகாரி "வவுனியன் விளாங்குளம் என்ற பெயர் நீண்டதாக இருந்ததால் அதனை சுருக்கி "வவுனியா என வைத்ததாக அவர் எழுதிய வன்னிக் கைநூலிலே தெரிவித்துள்ளார்.

இராவண மகாராசாவின் இலாங்காபுரம் இராஜதானி, மாந்தை, மாந்தோட்டம் பிரதேசத்தில் அமைந்திருந்தது. இராவண மகாராசா யுத்த்த்தில் தோல்வியடைந்ததன் பின்னர் அவருடைய ஆதரவாளர்களான இரச்சதர்கள், இயக்கர்கள்,நாகர்கள் இலங்காபுரத்திலிருந்து கிழக்கு நோக்கி இடம்பெயர்ந்தனர். அவர்கள் இருந்த பிரதேசங்கள் மூலைகளாக பிரிக்கப்பட்டு கிழக்கு மூலை, மேற்கு மூலை என பெயர்கள் சூட்டப்பட்டன.

போத்துக்கேயருடைய ஆட்சிக்காலத்தில் தேவலாயங்களுக்கான பற்றுக்களாக பிரிக்கப்பட்டிருந்தாலும் அதனை நடைமுறைப்படுத்த அவர்களால் முடியவில்லை. பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் வன்னிப்பிரதேசம் முழுவதும் 1783களில் அவர்களுடைய நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதும், பற்றுகள் என்ற பிரிவுகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. ஒல்லாந்தருடைய ஆரம்ப காலத்தில் முல்லைத்தீவில் கோட்டை கட்டப்பட்டிருந்த காரணத்தினால் முழுப்பிரிவும் ஒரு நிர்வாக மாவட்டமாக இருந்த்து.

ஏற்கனவே மூலைகளாக பிரிக்கப்பட்டிருந்த பகுதிகளுடன் பற்றுக்களாக பிரிக்கப்பட்ட பகுதிகளும் கிழக்கு மூலை பிரிவுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டமை இத்துடன் தெரியவருகிறது. அத்துடன் திருக்கேதீஸ்வரம் கோயில் பிரிவாக இருந்த உறையூர் (உடையாவூர்) என்ற பகுதியும் கிழக்கு மூலையுடன் சேர்க்கப்பட்டது. 1795களில் ஆங்கலேயருடைய ஆட்சிக்காலத்தில் வவுனியன் விளாங்குளம் தனியான பிரிவாக பிரிக்கப்பட்டு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

1890ம் ஆண்டுகளில் பெயர் மாற்றத்தின் பின்னர் " வவுனியா தனியான மாவட்டமாக பிரிக்கப்பட்டது. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் தேர்தல் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டன. பின்னர் தேர்தல் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டபோது கிழக்கு மூலையும், மேல்பற்று வடக்குப்பிரிவும் உறையூர் ஆகியன சேர்க்கப்பட்டு ஒரு தனியான நிர்வாக அலகாக அமைக்கப்பட்டுள்ளமை தெளிவாகிறது.

1.2. நிறுவனத்தின் தூரநோக்கு பணிக்கூற்று, குறிக்கோள்கள்

தூர நோக்கு

- வவுனியா மாவட்டத்தின் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி தேவைகளை நிறைவேற்றுவதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தைச் சுமூகநிலையில் செழிப்பினை நோக்கி முன்னேறுதல

பணிக் கூற்று

- மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்காகவும் சமூகங்களிமையே ஒற்றுமையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதற்காகவும், கிடைக்கத்தக்கவுள்ள வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி, அரசதிணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட ரீதியானசபைகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளை வினைத்திறனும் பயனுறுதியுடையதுமான சேவையை வழங்குதலை அபிவிருத்தி செய்வதற்காக ஒருங்கிணைத்தல்.

குறிக்கோள்

- மாவட்ட செயலகங்களின் பிரதான குறிக்கோள்களாக காணப்படுவது மாவட்ட மக்களின் நன்மை கருதி சட்ட ஏற்பாடுகள் மூலமும் பணிப்புரைகள் மூலமும் அனுமதிக்கப்பட்ட கொள்கைத் தீர்மானங்களையும் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்படுத்துதலும் மேற்பார்வை செய்தலும் ஒருங்கிணைத்தலும் ஆகும.

குறிக்கோள்களை எய்துவதற்கெனக் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள்

1. கிராம, பிரதேச, மாவட்ட மட்டங்களில் அலுவலர்கள் மற்றும் நிறுவனங்கள் மூலம் அரசாங்கத்தின் நடவடிக்கைகளையும் சட்டத்திற்குட்பட்ட செயல்களையும் நிறைவேற்றுவதையும் ஒருங்கிணைத்தல்
2. ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சட்டரீதியான சபைகளுக்கான முகவராக தொழிற்படுதல்
3. அரசிறை சேகரித்தல்
4. ஒதுக்கப்பட்ட நிதி மீதான நிதிசார் முகாமைத்துவமும் கணக்களிப்பும்
5. பன்முகப்படுத்திய பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தல்
6. பல்வேறு வெளிநாட்டு நிதியட்டத்துடனான திட்டங்களை மேற்பார்வையிடலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அபிவிருத்திக் கொள்கைகளை நோக்கி வழி நடத்துதலும்
7. மாகாணசபைகளின் நடவடிக்கைகளில் உதவி புரிதல்

1.2 பிரதான செயற்பாடுகள்

i. இணக்கமான உறவுகளைப்பேணுவதன் மூலம் மாவட்டத்திலுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட ரீதியான சபைகளின் நடவடிக்கைகளை முறைமையாக ஒருங்கிணைத்தல்.

ii. பொதுமக்களுக்குப் பயன் விளைவுடைய சேவையினை வழங்குதற் பொருட்டு பிரதேசசெயலகங்களையும் கிராம அலுவலர்களையும் முறைமையாக மேற்பார்வை செய்தல்.

iii. அரசாங்கத்தின் தீர்மானங்களை செயற்படுத்தலும் இயல்புநிலைக்கு மீள்வதற்கு உதவுதலும்.

iv. மக்களுக்கு வேண்டிய நேரத்தில் சேவை கிடைத்தலை உறுதிப்படுத்தும் பொருட்டு குடிமக்கள் சாசனத்தினை (பொதுமக்கள் பட்டயம்) செயற்படுத்துதல்

B. முகவர் பணிகள்

i. மக்கள் தமக்கு வேண்டிய சேவையினைத் தடங்கலோ தாமதமோ இன்றி வினைத்திறனுடனும் பயன்விளைவாகவும் பெறக்கூடியதாக பல்வேறு அமைச்சுக்கள் திணைக்களங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றல்.

ii. தாமதமோ தடங்கலோ இன்றி திருப்திகரமான சேவையினை மக்களுக்கு வழங்கக்கூடியதாக பிரதேச செயலகங்களுக்கு அனைத்து துறைகளிலும் வழிகாட்டல்.

iii. எதுவித சிக்கல்கலோ தாமதங்களோ ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக அமைச்சுக்கள் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுடன் சிறந்த ஒருங்கிணைப்பையும் இணக்கமான தொடர்பினையும் உறுதிப்படுத்தல்.

உரிய பொறிமுறை ஊடாக மாவட்ட மக்களின் பிரச்சினைகளுக்குத் துரித தீர்வு காணுதல்

C. இணைப்புச்செயற்பாடு

i. கீழ் குறிக்கப்பட்டுள்ள இணைப்புக்குழுக்களின் கூட்டங்களை நடாத்தவும் கலந்துரையாடுவதற்கும் தீர்மானங்கள் எடுப்பதற்கும் வசதியளித்தல்.

- மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு
- மாவட்ட திட்டமிடற்குழு
- மாவட்ட விவசாயக்குழு
- மாவட்ட விலை நிர்ணயக்குழு
- மாவட்ட வீடமைப்புக்குழு
- மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு
- நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகள் குழு
- மாவட்ட சுற்றாடல் சட்ட அமுலாக்கல்குழு
- மாவட்ட பாதுகாப்புக்குழு
- மாவட்ட காணி பயன்பாட்டுக்குழு
- மாவட்ட அனர்த்த முகாமைத்துவகுழு
- கணக்காய்வு முகாமைத்துவகுழு

மாவட்டத்தின் அரசசார்பற்ற ஸ்தாபனங்கள் பொதுமக்களுக்குப் பாகுபாடற்ற மனிதநேய சேவைகளை நிறைவேற்ற அவர்களின் நடவடிக்கைகளை இணைத்தல்

1.4. நிறுவன விளக்கப்படம்



1.5. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்/திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்/ மாவட்ட செயலகத்தின் பிரதேச செயலகங்கள்

சனத்தொகையும் பிரதான தொழில்களும்

பிரதேச செயலகங்களின் அறிக்கைகளின்படி இம்மாவட்ட சனத்தொகை 31.12.2019 இல் 184,444 ஆகும். இதில் 47,292 குடும்பங்கள் உள்ளடக்கப்படுகின்றனர். நகரைச் சார்ந்த பிரதேசங்களில் 37,310 பேரும் கிராமங்களைச் சேர்ந்த பிரதேசங்களில் 147,134 பேரும் வசிக்கின்றனர். சதுரகிலோமீற்றர் ஒன்றில் நகர் பிரதேசங்களில் 1,549 பேரும் கிராமப்புறங்களில் 77 பேரும் வசித்து வருகின்றனர். அத்துடன் சனத்தொகையில் 83.78% தமிழர்களும், 9.72% சிங்களவர்களும், 6.5% முஸ்லிம்களும் வாழ்கின்றனர்.

விவசாயம், சிறுகைத்தொழில், பண்ணைவளர்ப்பு, வியாபாரம் போன்றவைகளே இம்மாவட்டத்தின் பிரதான வாழ்வாதாரத் தொழிலாக காணப்படுகின்றது. அரசாங்க சேவையில் கணிசமான அலுவலர்கள் இம்மாவட்டத்தையே சொந்த இடமாக அல்லது இருப்பிடங்களாக கொண்டுள்ளனர். பல வகையான நிதி நிறுவனங்களின் செயற்பாடுகளும் இங்கே மிகச் சிறப்பாக இடம்பெறுகிறது. தனியார் துறையினரும், அரச சார்பற்ற நிறுவனங்களும் இம்மாவட்டத்தின் வாழ்வாதாரத்திற்கு பெரும்பங்காற்றுகின்றனர்

அமைவிடம் சார்பான தகவல்கள்

- **மாகாணம்** - **வடமாகாணம்**
- **நிர்வாக மாவட்டம்** - **வவுனியா**
- **மொத்த நிலப்பரப்பு** - 1,967 **ச.கி.மீ**
- **பி.செ. பிரிவுகளின் எண்ணிக்கை** - 04 **(நான்கு)**
- **கி. அ. பிரிவுகளின் எண்ணிக்கை** - 102
- **கிராமங்களின் எண்ணிக்கை** - 512

31.12.2019ல் உள்ளவாறான வவுனியா மாவட்டத்தைப் பற்றிய சில அடிப்படைத்தரவுகள்

விபரம்	பிரதேச செயலகம் வவுனியா	பிரதேச செயலகம் வவுனியா வடக்கு	பிரதேச செயலகம் வவுனியா தெற்கு	பிரதேச செயலகம் செட்டிகுளம்	வவுனியா மாவட்ட முழுத் தொகை
கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை	42	20	20	20	102
கிராமங்களின் எண்ணிக்கை	218	110	91	93	512
குடும்பங்களின் எண்ணிக்கை	32,295	3,181	3,604	8,212	47,292
அங்கத்தவர்களின் எண்ணிக்கை	125,952	12,407	14,058	32,027	184,444
ஆண்களின் எண்ணிக்கை	61,275	6,416	6,910	16,182	90,783
பெண்களின் எண்ணிக்கை	64,678	5,991	7,148	15,844	93,661
மொத்த நிலப்பரப்பு(சகிமீ)	590	746	236	395	1,967

அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

வவுனியா நிர்வாக மாவட்டத்தின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு கடந்த வருடம் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இவை விவசாயத்துறை மேம்பாட்டு வாழ்வாதார உதவிகள், பொதுவசதிகள், உட்கட்டமைப்பு வசதிகள், கிராமிய சமூக வறுமை ஒழிப்புத்திட்டங்கள், மீள்குடியேற்றம், வீதிப்போக்குவரத்து அபிவிருத்தி, பாடசாலைகள் அபிவிருத்தி,கிராமிய வசதிகள் அபிவிருத்தி, விளையாட்டுத்துறை மற்றும் சமயத்தலங்கள் அபிவிருத்தி மற்றும் சிறுதொழில் முயற்சியாண்மை கடன் திட்டங்கள் எனும் பல்வேறு துறை சார்ந்தவைகளை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டன.

2019ம் ஆண்டு கம்பரெலிய துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 830 வேலைத்திட்டங்களை அமுல்படுத்த ரூபா 408.25 மில்லியன் ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றது. இத்திட்டத்தின் கீழ் மாவட்டத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள் அனைத்தையும் தழுவிய வண்ணம் 821 வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதுடன் 09 வேலைத்திட்டங்கள் தற்போது முடிவுக்கு வந்துள்ளன.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார மீள்குடியேற்றம், புனருத்தாரணம் மற்றும் வடக்கு மாகாண அபிவிருத்தி, இளைஞர் விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் குடிநீர் செயற்றிட்டங்கள் 110ற்கு 12.8 மில்லியன், வீட்டுத்திட்டங்கள் கட்டம் 1ல் 450 திட்டங்கள் 450 மில்லியன் ரூபாவிலும், கட்டம் 2ல் 550திட்டங்கள் 550 மில்லியன் ரூபாவிலும் கட்டம் 3ல் 25 திட்டங்கள் 25 மில்லியன் ரூபாவிலும் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட விவசாய பணியகத்தினூடாக நெல்காயவிடும் தளம், விவசாய கிணறுகள் திருத்தம், நெல் கொள்வனவு, பசுமைக்கழகங்கள் அமைத்தல், தேசிக் கன்றுகள் வழங்கல் என்பவற்றின் பொருட்டு 21.3 மில்லியன் நிதியில் செயற்திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன.

மாவட்டத்தில் தொழில் முயற்சியாண்மை பகுதியால் மாவட்டத்திலே மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட கிராமிய மட்ட தொழில் முயற்சியாளர்களுக்கு 28 மில்லியன் ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதோடு தொழில் முயற்சியாளர்களுக்கு 8 மில்லியன் ரூபா கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட விசேட வேலைத்திட்டங்களை துரிதமாக மேற்கொள்கையில் மழை காரணமாகவும், நிதி கிடைக்கப் பெறுதல் போதியளவில் காணப்படாமையும் எதிர்நோக்கிய சவால்களாக குறிப்பிடலாம்.

இவ்வாண்டில் முன்னெடுக்கப்பட்ட மேற்படி பணிகள் மூலம் வவுனியா மாவட்ட வாழ் மக்களது வாழ்வாதாரம் உயர்வடைந்துள்ளமையை அவதானிக்கக்கூடியதாகவுள்ளதுடன் இவற்றினை எடுத்துக்காட்டும் வகையில் 2019ம் ஆண்டுக்கான புள்ளிவிபரங்கள், வருடாந்த செயலாற்றுகை, கணக்கறிக்கைகள் என்பவற்றை புத்தக வடிவில் சமர்ப்பிப்பதையிட்டு நான் மிகவும் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும் பயங்கரமான கொவிட்- 19 சூழலின் மத்தியிலும் இப்பெருமுயற்சியை
வெற்றிகரமானதாக்க அயராது உழைத்து களைத்த அலுவலர்கட்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ்.எம்.சமன் பந்துலசேன
அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்
வவுனியா.

எஸ்.எம்.சமன் பந்துலசேன
மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்
வவுனியா

அத்தியாயம் 03 - 2019 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச்செயலாற்றுகை

3.1. நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

ஏசீஏ - எப்

2019 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2019		குறிப்பு	உண்மை நிலை 2019	உண்மை நிலை 2018	
-	வருமானப் பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	ஏசீஏ-1
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானம் பெறுகைகள்		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		2,639,782,000	1,741,191,613	ஏசீஏ-3
-	வைப்புகள்		298,359,834	236,237,783	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		11,412,367	15,981,003	ஏசீஏ-5/5(ஏ)
-	ஏனைய பெறுகைகள்		85,074,479	-	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		**3,034,628,680**	**1,993,410,399**	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		**3,034,628,680**	**1,993,410,399**	
	கழி : செலவினம்				
-	மீண்டுவரும் செலவினம்		-	-	
179,125,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	178,498,666	156,037,517	ஏசீஏ-2(ii)
48,705,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	46,495,846	45,575,654	ஏசீஏ-2(ii)
1,470,000	மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள்	7	1,246,136	1,282,198	ஏசீஏ-2(ii)
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	ஏசீஏ-2(ii)
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	ஏசீஏ-2(ii)
229,300,000	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)		**226,240,648**	**202,895,369**	
	மூலதனம் செலவினம்				
18,000,000	மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	13,271,036	16,812,804	ஏசீஏ-2(ii)
34,100,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	21,610,069	52,999,580	ஏசீஏ-2(ii)
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	ஏசீஏ-2(ii)
1,900,000	மனித வள அபிவிருத்தி	14	1,899,412	1,797,774	ஏசீஏ-2(ii)
1,350,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	1,348,860	-	ஏசீஏ-2(ii)
55,350,000	மொத்த மூலதனம் செலவினம் (உ)		**38,129,376**	**71,610,158**	
	பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)		**265,579,716**	**280,528,635**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		249,642,412	259,672,832	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		15,937,304	20,855,803	ஏசீஏ-5/5(ஏ)
	மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ)		**529,949,740**	**555,034,162**	
284,650,000	2019. டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி ஏ = (இ-எ)		**2,504,678,940**	**1,438,376,237**	

3.3. நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ - பீ

2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2019 ரூபா	2018 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	1,579,055,053	1,533,908,436
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	48,216,868	45,457,146
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**1,627,271,921**	**1,579,365,582**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
தேறிய பெறுமதி		(63,247,362)	(17,289,662)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		1,579,055,053	1,533,908,436
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	-	-
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்பக் கணக்குகள்	ஏசீஏ-4	111,464,230	62,746,808
பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**1,627,271,921**	**1,579,365,582**

பக்க இலக்கம் 5 முதல் 43 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 44 முதல் 52 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 26/02/2020

S. Hettiarachchi
Secretary
Ministry of Public Administration,
Home Affairs and Provincial Councils
& Local Government
"NILA MEDURA"
Elvitigala Mw., Narahenpita, Colombo - 05.

....
கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 22/02/2020

எஸ்.எம்.சமன் பந்துலசேன
மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்
வவுனியா

....
பிரதான கணக்காளர்
பெயர் :
திகதி : 20/02/2020

அ.பாலகுமார்
பிரதம கணக்காளர்
மாவட்டச் செயலகம்,
வவுனியா

3.4 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ - சீ

2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான காசுப்பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2019 ரூபா	2018 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்		1,989,725,123
ஏனைய திணைக்களங்களின்/ அமைச்சுக்களின் மூலம் திரட்டப்படுகின்ற வருமானம்	65,965,947	
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	2,639,782,000	
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**2,705,747,947**	**1,989,725,123**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள்	202,474,568	820,537,740
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	1,246,136	1,282,198
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	2,427,516,116	-
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	-	-
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**2,631,236,820**	**821,819,938**
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**74,511,127**	**1,167,905,185**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
பௌதீக சொத்துக்களின் சொத்துக்களின் விற்பனை	-	-
வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முற்பணங்களிலிருந்து அறவிடப்பட்டவை	15,995,779	
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	**15,995,779**	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	37,080,351	1,167,905,185
முற்பணக் கொடுப்பனவுகள்	22,394,413	
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**59,474,764**	**1,167,905,185**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(43,478,985)**	**(1,167,905,185)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ+ஊ)	**31,032,142**	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
கிடைக்கப்பெற்ற வைப்புகள்	263,191,066	
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	**263,191,066**	-
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வைப்புகளின் கொடுப்பனவு	232,158,923	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	**232,158,923**	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	**31,032,142**	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) -(ஒ)	**0**	-
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	**0**	-

3.5 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

அறிக்கையிடலின் அடிப்படை

1. **அறிக்கையிடல் காலப்பகுதி**

   இந் நிதிக்கூற்றுகளுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2019 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்

2. **அளவீட்டுக்கான அடிப்படை**

   நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

   நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3. **வருமானத்தை அடையாளங் காணுதல்**

   நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவற்றின் வரியிடக்கூடிய காலப்பகுதியை கவனத்திற் கொள்ளாது கணக்கீட்டுக் காலப்பகுதிக்குள் கிடைக்கக்கூடிய காசின் அடிப்படையில் அடையாளங் காணப்படுகின்றது.

4. **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

   சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

   கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5. **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

   இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6. **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

   காசு மற்றும் காசுக்கு சமமானவை 2019 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்

3.6 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

ரூ , 000

வருமான குறியீடு	வருமானக் குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீடு %
4000-1003-07-02	பதிவாளர் நாயகத் திணைக்கள பதிவுக்கட்டணம்	7,040	7,040	8,484	120.5%
4000-1003-07-03	மரங்களை எடுத்துச் செல்லல் தனியார்	-	-	47	
4000-1003-07-05	வெடிமருந்து அனுமதி	80	80	133	167.25%
4000-1003-07-99	ஏனைய அனுமதிப்பத்திரங்கள் மீதான கட்டணங்கள்	150	150	92	61.92%
4000-2002-01-01	அரச கட்டிடங்கள் மீதான வாடகைகள்	3,150	3,150	3,558	112.97%
4000-2002-01-02	அரசாங்க காடுகள் மீதான வாடகை	-	-	4,121	
4000-2002-02-99	ஏனையவைகளின் மீதான வட்டி	2,300	2,300	2,533	110.15%
4000-2003-02-13	பரீட்சைகளும் ஏனையவைகளும்	-	-	209	
4000-2003-02-14	மோட்டார் பதிவாளர் நாயக திணைக்கள கட்டணங்கள்	-	-	30,104	
4000-2003-02-99	பொதுவான நிர்வாக செயற்பாட்டு கட்டணங்களும் அறவீடுகளும்	1,000	1,000	1,440	144.06%
4000-2003-99-00	ஏனைய பெறுகைகள்	3,000	3,000	2,779	92.65%
4000-2004-01-00	சமூக பாதுகாப்பு பங்களிப்புகள்	-	-	12,218	

3.7 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூ , 000

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	215,000	229,300	226,240	98.66%
மூலதனம்	54,000	55,350	38,129	68.88%

3.8 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/ மாவட்டச் செயலகம் / மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

ரூ, 000

தொடர் இல.	அமைச்சு/திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டு நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
			அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
1	ஜனாதிபதி செயலகம்	கிராம சக்தி	66,830	66,830	39,773	59.51%
2		சிறுநீரக நோய்த் தடுப்புத் திட்டம்	2,197	2,197	1,928	87.76%
3		தேசிய உணவுத் திட்டம்	5	5	5	100%
4		தேசிய விழா	89	89	55	62.64%
5		சிறுவர் பாதுகாப்பு செயற்திட்டம்	399	399	350	87.86%
6		விகாரைகள் நிர்மாணம்	2,000	2,000	20	10.00%

7		ஸ்மார்ட் லங்கா	5,525	5,525	1,511	27.35%
8	புத்தசாசன அமைச்சு	விகாரைகள் நிர்மாணம்	2,437	2,437	175	7.21%
9	தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு	பட்டதாரிப் பயிலுனர்களுக்கான கொடுப்பனவு	29,280	29,280	21,158	72.26%
10		DCB	29,503	29,503	12,083	40.95%
11		WFP	125	125	124	99.78%
12		RIDP	100,389	100,389	41,779	41.61%
13		கம்பரெலிய	408,250	408,250	349,299	85.56%
14		சிறு கைத்தொழில் பிரிவு	3,890	3,890	3,752	96.46%
15	நீதி அமைச்சு		4,074	4,074	3,856	94.65%
16	கமத்தொழில் அமைச்சு	Paddy	200,000	129,665	129,665	100%
17			16,800	16,800	14,770	87.91%
18	மகளீர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு	கர்ப்பிணித் தாய்மாருக்கான போசாக்கு உணவு வழங்கல்	52,000	52,000	51,216	98.49%
19			4,244	4,244	4,005	94.37%
20	ஊடக அமைச்சு		43	43	36	83.44%
21	காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு	நில மானியம்	809	809	783	96.89%
22			2,325	2,325	2,037	87.63%
23	ஆரம்பக் கைத்தொழில் சமூக வலுவூட்டல் அமைச்சு	Kidney	78,902	78,902	78,820	99.89%
24		Disable	67,822	67,822	67,548	99.59%
25		Elders	53,489	53,489	53,014	99.11%
26		Over 100	240	240	195	81.25%
27	பொது நிர்வாக அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சு	அவசர நிவாரண உதவி	2,199	2,199	1,396	63.50%
28		பாதுகாப்பு மையத்தினை புதுப்பித்தல்	2,024	2,024	2,024	100%
29		வெள்ளப் அனர்த்தத்தை குறைத்தல்	6,691	6,691	1,672	24.99%

30			2,282	2,282	2,090	91.60%
31	கைத்தொழில் மற்றும் வாணிப, நீண்ட காலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள் குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு	TFR – வீட்டுத் திட்டம்	556,000	556,000	341,011	61.33%
32		IDPS	30,800	30,800	26,455	79.40%
33		நன்வமு லங்கா	113,000	113,000	178	0.15%
34	உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு		387	387	324	83.62%
35	தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சு	அபிவிருத்தி வேலைகள்	14,161	14,161	6,233	44.01%
36		ONUR	68,348	68,348	13,221	10.58%
37			1,317	1,317	1,260	95.72%
38	பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு	சுகித்தபுரவர	5,000	5,000	1,279	25.59%
39	தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு		5,723	5,723	5,413	94.60%
40	விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு		584	584	419	71.90%
41	பௌத்த மத அலுவல்கள் திணைக்களம்	தகம்பாசல நிகழ்ச்சி	9,089	9,089	8,883	97.73%
42			1,112	1,112	1,070	96.19%
43	முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்	அபிவிருத்தி வேலைகள்	450	450	440	97.99%
44			9	9	9	100%
45	கிறிஸ்தவ மத அலுவல்கள்	ஆலய நிர்மாணப்பணிகள்	1,200	1,200	1,026	85.54%

46	திணைக்களம்	குழாய்கிணறு நிர்மாணம்	566	566	563	99.49%
47	கலாச்சார அலுவல்கள் திணைக்களம்		854	854	667	78.16%
48	அரசாங்க தகவல் திணைக்களம்		123	123	117	95.41%
49	சமூக சேவைகள் திணைக்களம்		2,860	2,860	2,481	86.74%
50	நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்		3,540	3,540	3,202	90.44%
51	விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்	விளையாட்டு மைதானங்கள் புனரமைப்பு	8,000	8,000	7,900	98.75%
52			271	271	-	0%
53	குடிவரவு குடியகல்வுத் திணைக்களம்		256	256	192	74.82%
54	ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்		6,315	6,315	6,233	98.69%
55	தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்		1,337	1,337	1,228	91.84%
56	பதிவாளர் நாயகம் திணைக்களம்	பதிவாளர்களுக் குரிய கொடுப்பனவுகள்	485	485	475	97.87%
57	வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்	வனவிலங்குகள் பாதிப்பு	78	78	78	100%
58	மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்	கட்டட நிர்மாணப் பணி	1,497	1,497	-	0%
59			805	805	719	89.35%
60	சமுதாயஞ் சார் சீர் திருத்தத் திணைக்களம்		1	1	-	0%
61	காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்		539	539	530	98.37%
62	மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம்		460	460	379	82.41%

3.9 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	2019.12.31 திகதிய சுற்றாய்வுச் சபை அறிக்கைபடி மீதி	2019 திகதிய நிதி நிலைமை அறிக்கைபடி மீதி	எதிகாலத்தில் கணக்கிட வேண்டியது	அறிக்கையிடல் முன்னேற்றம் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	657,603	657,603		
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்	159,175	159,175		
9153	காணி	751,818	751,818		
9154	அருவமான சொத்துக்கள்				
9155	உயிரியல் சொத்துக்கள்				
9160	நடைபெறும் பணிகள்	10,457	10,457		
9180	குத்தகை சொத்துக்கள்				

3.10 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. NNP/JF/A/DSJ/02/19 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 29 மே 2020

மாவட்டச் செயலாளர்

மாவட்டச் செயலகம்

வவுனியா

வவுனியா மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வவுனியா மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்படும் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படவேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව | இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. | No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து. 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேறகொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

